# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!



## 'தத்தம் செய்த' சீஷனுக்கு, 'கொரோனா பயம் இருக்காது!

விற்கப்பட்ட 'இரண்டு அடைக்கலான் குருவிகளில்' ஒன்றாகிலும் பிதாவின் அனுமதியில்லாமல், தரையிலே விழாது! என நம் குரு உரைத்திருக்க.... தன் முழுமையையும் குருவின் பாதம் தத்தம் செய்துவிட்ட உத்தம சீஷன், தன் சரீரத்திற்கு பயப்படுவது நியாயம்தானா? தனக்குண்டான யாவற்றையும் 'விற்றுப்போட்ட ஒரு சீஷன்' (மாற்கு 10:21). அனேகம் அடைக்கலான் குருவிகளைக் காட்டிலும் விசேஷித்தவன்!.... "ஆதலால் பயப்படாதிருங்கள்" என கூறிய இனிய தொனி நம் நெஞ்சம் நிறைப்பதாக!

தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறதே . . . கீழே விழுந்த முடியைத்தான் உதறிவிட்டீர்கள்! உங்கள் ஜன்னலருகே வந்து "கீச்.....கீச்" என, வந்து நிற்கும் குருவியையாவது இனிமேல் துரத்திவிடாதிருங்கள்! அந்தக் 'குருவியை' இனிமேலாவது சற்று கவனித்துப்பாருங்கள்!அந்தக் குருவியின் ஆனந்த 'கீச், கீச்' ஒலி, உங்களை விசுவாச ஏணியில் ஏந்திச் சென்று, மகிழ்ச்சியின் நிம்மதிப் பொன்னூஞ்சலில் அமரச் செய்துவிடும்!

-tr

பெட்டகம் 22 ஆகஸ்ட் 2020 பரல்கள் 8



## குடும்பத்தில் 'சொந்த சகோதரனைப்' புறங்கூறுவது அபாயம்!

**ச**ங்கீதம் 50:19-22 வசனங்களில் "உன் வாயைப் பொல்லாப்பிற்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்...." என தேவன் கூறும் எச்சரிக்கையை கேளுங்கள்!

இதுவரை செய்த புறங்கூறுதலுக்காகத் துரிதமாய் தேவனுடைய சமூகத்தைத் தேடி அவரின் இரக்கத்திற்காக கெஞ்சி ஜெபியுங்கள். மாத்திரமல்ல, நீங்கள் புறங்கூறிய ஜனங்களிடம் தீவிரமாய்ச் சென்று மன்னிப்பும் கேளுங்கள்!

1கொரிந்தியர் 5:9-13 வசனங்களில், புறங்கூறுதலைக் குறித்துப் புதிய உடன்படிக்கையின் வார்த்தைகள் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த உடன்படிக்கையின் வார்த்தை யாதெனில் ... "தங்களைச் சகோதரன் அல்லது சகோதரி என்று கூறிக்கொண்டு, இன்னும் தொடர்ந்து புறங்கூறுபவர்களோடு... சம்பாஷிக்கக்கூடாது, புசிக்கவும்கூடாது!" அதுமாத்திரமல்ல, இங்கு ஓர் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது யாதெனில், "அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்!" புறங்கூறுகிற ஒரு நபர், நல்லவரா? தீயவரா? அல்லது கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கப் பட்டு பேசுகிறாரா? அல்லது வேறு விதமாய் பேசுகிறாரா? என்றெல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கத்தேவையே இல்லை ... நிச்சயமாய் இல்லை! "அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்" அவ்வளவுதான்.

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## 'பாவத்தோடு' வேதத்தை அறியலாம், தேவனை அறிய இயலாது!

*தேவனை அறிந்துகொள்வதைக் காட்டிலும், வேதாகமத்தை அறிந்து கொள்வது மிகவும் இலகுவேயாகும்! ஏனென்றால், வேதாகமத்தை அறிந்து கொள்ள எந்தக் கிரயமும் நீங்கள் செலுத்த வேண்டியதேயில்லை.... நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அதை உட்கார்ந்து படிக்கவேண்டும், அவ்வளவுதான்!*

*உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வேசித்தனம் செய்து கொண்டும், உங்கள் சிந்தை வாழ்க்கையில் அசுத்தமாய் இருந்து கொண்டும்.... இன்னமும் தொடர்ந்து வேதத்தை நன்கு அறிந்தவர்களாய் இருந்திட முடியும்! ஓர் புகழ்பெற்ற பிரசங்கியாய் இருக்கும் அதே வேளையில், நீங்கள் பணத்தை இச்சிப்பவர்களாயும் இருந்திட முடியும்! ஆனால்.... உங்கள் வாழ்க்கையில் வேசித்தனம் செய்துகொண்டே "தேவனையும் தொடர்ந்து அறிந்திருப்பது" ஒருக்காலும் முடியாது! நீங்கள் பண ஆசை கொண்டவர்களாய் வாழ்ந்து கொண்டே "தேவனையும் தொடர்ந்து அறிந்திருப்பது" ஒருக்காலும் முடியாது... முடியவே முடியாது! ஆகவேதான், இன்றைய பெரும்பாலான பிரசங்கிமார்கள் தேவனை அறிவதைக் காட்டிலும், இலகுவான பாதையாகிய 'வேதாகமத்தை அறிவதையே' தங்களுக்கென தெரிந்து கொள்கிறார்கள்!*

> **சகோதரர்களாகிய உங்கள் யாவரையும் பார்த்து நான் மிகுந்த பரிவுடன் கேட்கிறேன்: நீங்கள் வேதாகமத்தை மாத்திரம் அறிந்திருப்பதில் மகிழ்ச்சியாய் இருக்கிறீர்களா? அல்லது, ஆண்டவரை அறிய வேண்டும் என்ற தீராத பசி உங்கள் இருதயங்களில் இருக்கிறதா?**

*"நான் ஆண்டவரை அறிந்துகொள்ள வேண்டியவிதமாய் அறிந்து கொள்வதே" என்னுடைய தீராத வாஞ்சையென பிலிப்பியர் 3:8-10 வசனங்களில் பவுல் கூறினார். இவ்வாறு கர்த்தரை அறிந்து கொள்வதை ஒப்பிடும்போது, மற்ற அனைத்தையும் "குப்பையாகவே" அவர் கருதினார். "இந்த ஒரு விலையேறப்பெற்ற முத்தை" வாங்குவதற்கு, பவுல் தனது எல்லா முத்துக்களையும் விற்றுப்போட்டார்! பவுலுடைய ஊழிய ரகசியம், கமாலியேலின் வேதாகமக் கல்லூரியில் எத்தனை*

வருடங்கள் வேதத்தை கற்றார் என்பதாயிராமல், அவர் ஆண்டவரைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொண்ட ஜீவியத்திலேயே அடங்கியிருக்கிறது!

உங்கள் தனிப்பட்ட ஜீவியத்தில் "தேவனையும், இயேசுகிறிஸ்து வையும் அறிந்துகொள்வதே" நித்தியஜீவன்! (யோவான் 17:3). பரலோகத்தில் "நித்திய காலமாய்" வாழ்வதே நித்திய ஜீவன் என நாம் விளங்கியிருக்கக்கூடும். ஆனால் இயேசுவோ அவ்வித விளக்கத்தை ஒருபோதும் தரவேயில்லை. பரலோகத்திற்கு போவதோ அல்லது நரகத்திற்கு தப்புவதோ 'நித்தியஜீவனுக்கு' அடுத்த காரியத்திற்கு யாதொரு சம்பந்தமுமில்லை! **ஆம், "ஆண்டவரை சொந்தமாய் அறிந்து கொள்வதே" நித்திய ஜீவனாகும்.** தேவனை நெருங்கி, அவரை தனிப்பட்ட விதத்தில் சொந்தமாய் அறிந்துகொள்வது ஒன்றே, என் வாழ்க்கையில் நான் கொண்ட தாகமும், இருதயத்தின் பாரமுமாய் இருக்கிறது! எந்த அளவிற்கு **நான் தேவனை என் சொந்தமாய் அறிந்திருக்கிறேனோ,** அந்த அளவிற்குத்தான் என் ஊழியத்தில் பரத்தின் அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவேதான், நான் ஊழியம் செய்யும் எங்களுடைய எல்லா சபைகளிலும், ஜனங்கள் "தேவனை அறிந்து கொள்ளும்படி நடத்துவதற்கே" நான் பாடு பட்டிருக்கிறேன்.

சரித்திரத்தில் எப்போதும் இல்லாத அளவிற்கு, இக்காலத்தில் தான் வேத அறிவு ஏராளமாய் பெருகியிருக்கிறது! அன்று பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு சுமார் 1500 வருடங்களாகியும் கூட, அச்சடிக்கப்பட்ட வேதப்புத்தகங்கள் உலகில் எங்கும் இல்லாமல் தான் இருந்தது. இந்த கடைசி இரண்டு நூற்றாண்டுகளில்தான், வேதப்புத்தகம் தாராளமாய் நமக்குக் கிடைக்கிறது. இன்றோ, பல்வேறு மொழிபெயர்ப்புகளும், ஒத்தவாக்கியங்களும், வேதபாட விளக்கங்களும் ஏராளமாய் வந்து விட்டன.

இவ்வித வேத அறிவின் பெருக்கம், "பரிசுத்தமிக்க கிறிஸ்த வர்களை" ஏராளமாய் உருவாக்கிவிட்டதென நீங்கள் எண்ணுகி றீர்களா? இல்லவேயில்லை! வேத அறிவு பரிசுத்தத்தை உருவாக்க முடியுமென்றால், சரித்திரத்தில் **இன்று** வாழும் நாம்தான் அதிக தேவ பக்தியான ஜனங்களை கொண்டிருக்க வேண்டும்! ஆனால் காரியம் அவ்வாறு இல்லையே!?

**வேத அறிவுதான் பரிசுத்தத்தை உருவாக்க முடியுமென்றால், நம் யாரைக் காட்டிலும் அதிகமாய் வேதாகமத்தை அறிந்திருக்கும் "சாத்தான்" பரிசுத்தமானவனாய் மாறியிருப்பானல்லவோ?**

இன்று ஏராளமான வேத கலாச்சாலைகள், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வேதாகமத்தை போதிக்கின்றனவே! ஆனால், "உலகத்தின் சீரிய தெய்வபக்தியானவர்கள்" இந்த வேதகலாச் சாலையிலா இருக்கிறார்கள்? இல்லை! இன்னும் சொல்லவேண்டு மென்றால், இன்றுள்ள வேதகலாச்சாலை பட்டதாரிகள், அஞ்ஞானி களை விட மோசமாய்தான் இருக்கிறார்கள்!

சில வருடங்களுக்கு முன்பு, இந்தியாவில் உள்ள ஓர் உயர்ந்த சுவிசேஷ வேத கலாச்சாலையில் **முதல் மதிப்பெண்** பெற்று பட்டம் வாங்கிய மாணவனை நான் சந்தித்தேன்.

> **அந்த மாணவன், தான் வேத கலாச்சாலையில் சேரும்போது இருந்த ஆவிக்குரிய நிலையைவிட, வேத கலாச்சாலையின் மூன்று ஆண்டு படிப்பிற்குப் பிறகு உள்ள தன் ஆவிக்குரிய நிலை மோசமாய் மாறிவிட்டது என வருத்தத்துடன் கூறினார்!**

அப்படியானால், இந்த வேதாகமக் கல்லூரி இந்த மாணவனுக்கு என்னத்தைப் போதித்தது? ஆம், வேதாகமத்தைப் "பற்றியும்" கிறிஸ்தவத்தைப் "பற்றியுமான" போதகங்களையே போதித்திருக்கிறது. இதுபோன்ற வேதாகாமக் கல்லூரிகளில் நிச்சயமாய், சாத்தான் முதல்மார்க் வாங்குவான் என்பதில் சந்தேகமேயில்லை!

ஒருவன் கோபத்தையும், கசப்பையும், இச்சையான சிந்தை களையும், பண ஆசையையும் ஜெயம் பெறாமல், "வியாக்கியான அகராதியையும்" "ஆராய்ச்சி வல்லுனர்கள்" கூறியிருப்பவை என்ன? என்பதையும், ஒரு வசனத்தின் "மூல கிரேக்க பதத்தில் உள்ள அர்த்தம்" என்ன? என்பதையும் அறிந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்? இவன் பெற்ற வேத கலாச்சாலைச் சான்றுகளை வைத்து, ஒரு சபையில், பாஸ்டராய் வேண்டுமானால் நியமனம் பெறலாம்! ஆனால், தன்னுடைய சபையில் உள்ள ஜனங்களுக்கு இவர் என்னத்தைப் போதிப்பார்? இன்று ஜனங்களுக்கு "ஒழுக்க-நெறியில்" ஏராளமான பிரச்சனைகள் இருக்கிறதேயல்லாமல் "வேத சாஸ்திரத்தில்" இவர் களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது? இந்த மக்களுக்கு இவர்கள் என்ன உதவியைச் செய்திட முடியும்? பாருங்கள், இப்படித்தான் இன்று தேவனுடைய பணி நம் இந்தியாவில் சீரழிந்து கொண்டிருக்கிறது!

நீங்கள் முதலாவது தேவனை அறிந்திருந்தால் மாத்திரமே, உங்கள் மந்தையும் தேவனை அறிந்து கொள்ளும்படி நீங்கள் நடத்திட முடியும்! உங்கள் சொந்த வாழ்க்கையில் பாவத்தை ஜெயித்திருந்தால், உங்கள் மந்தையும் பாவத்தை ஜெயித்து வாழ நீங்கள் நடத்திட

*முடியும்! அவ்வாறு இருந்தால் மாத்திரமே,* **அவர்களும் ஆயத்தப் படுத்தப்பட்டு** *"வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றவர்களாய்" கர்த்தருக்கு ஊழியம் செய்ய புறப்பட்டுச் சென்றிடவும் முடியும்!*

**ஒருவன் வேத அறிவையும் அல்லது வேத-கலைப் பட்டங்களையும் பெற்றதினிமித்தம் சாத்தான் அதிர்ச்சி அடைந்துவிட்டான் என எண்ணு கிறீர்களா? ஒருக்காலும் இல்லை! தேவனை அறிந்து.... பரிசுத்தமும், தாழ்மையும் கொண்ட புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்குமே சாத்தான் அஞ்சி நடுங்குகிறான்! அதிர்ச்சியும் அடைகிறான்!**

*இவ்வாறு, நம்முடைய இளைய சகோதரர்களும், சகோதரிகளும் தேவனை அறிவதற்கு நடத்தும்படி, ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக!*

---

## வேறு பிரித்து, ஆவியை பகுத்தறியும் வரத்தை பெற்றேன்!

*பரம பராமரிப்பில் நான் பெற்ற தஞ்சம் ஒரு பக்கமும், என்னுடையதெல்லாம் நான் வெறுத்துவிட்டு அவரைப் பின்பற்றும் தீர்மானம் மறுபக்கமும் இருந்தபடியால்,* **இந்த உலகத்திலிருந்து நான் வேறு பிரிந்து வாழ்ந்த வாழ்க்கை வலிமை கொண்டதாய் மாறியது!** *முன்புபோல் என் மாமியார் என்மீது சிடுசிடுப்பு காட்டுவதில்லை. எனக்கு ஏற்படும் சிறிய சுகவீனத்தில் கூட, என் மீது அதிக அக்கறை காட்டினார்கள். இதற்கு காரணம் 'மனுஷீக ரீதியாக' அவர்கள் வைத்திருந்த பயமேயாகும்! என்னை மறுமணம் செய்வதற்கு என் இளவரச பரம்பரையை விட மிக உயர்ந்த கனத்திற்குரிய கனவான்கள் ஒருவர்பின் ஒருவராய் மூன்று பேர் வந்தார்கள். நானோ, ஆண்டவருடைய சித்தப்படி அந்த கோடீஸ்வர பிரபுக்களை மணம் செய்ய மறுத்துவிட்டேன். என் கணவர் அதாவது என் மாமியாருடைய மகன் மரித்துப்போன நிலையில், அதுவரை எனக்கு இழைத்த பல்வேறு கொடுமைகளை அவர்கள் அறிவார்கள். ஆயினும் அவர்கள் இழைத்த யாதொரு கொடுமைக்கும், என் முகம் சுளிக்கவோ அல்லது எதிர்த்து பேசவோ இல்லை என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்! இந்நிலையில் நான் மறுமணம் செய்து கொள்வது, அவர்களுக்கு எதிரான தீங்குவிளைவிக்கும் என்பதையும் அறிந்திருந்தார்கள். அவர்கள் செய்த தீங்கிற்கு நிகராக, நான் இப்போது பதிலுக்கு பதில் செய்து விடுவேனோ என்ற அச்சம் அவர்களுக்குள் இருந்தது. ஆகவேதான், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்மீது பாசத்துடன் நடப்பதாய் காண்பித்திட விரும்பினார்கள்!*

இச்சமயத்தில், நான் அதிகமான சுகவீனப்பட்டேன்! எனக்குரியதையெல்லாம் முற்றிலும் தேவனுக்குப் படைத்ததை தேவன் அங்கீகரித்ததைப் போலவே இந்த சுகவீனத்தை நான் கண்டேன்! இந்த சுகவீன சமயத்தில், என் மாமியாரின் மனமாற்றம் தேவனுக்கு முன்பாக உறுதியான தீர்மானமாயிருந்தது என்பதும் எனக்கு தெளிவுண்டானது. என் சுகவீனத்தில், எனக்கு உதவியாக என் படுக்கை அருகிலேயே இருந்தார்கள். அதுமாத்திரமல்லாமல் அநேக சமயங்களில் 'மிகுந்த கண்ணீரோடு' என் சுகத்திற்காக தேவனிடம் வேண்டுதல் செய்ததையும் கண்டேன்.

**அன்று அவர்கள் எனக்கு தீமை செய்தபோதும் என் மனமார நேசித்திருந்தேன்! இப்போது அவர்களுடைய மனமாற்றத்தைக் கண்டு, அவர்களை இன்னும் அதிகமாய் நேசித்தேன்!**

ஆம், இன்னும் அதிகமாய் 'என் தாயின் ஸ்தானத்தில்' அவர்களை நிறுத்தி நான் அன்புகூர்ந்திட பாக்கியம் பெற்றேன்! இப்போது நான், கர்த்தருடைய அழைப்பின்படி ஜெனிவா சென்றிட தீர்மானித்திருந்த இந்த வேளையில், வயதாகிவிட்ட அவர்களை தனியே விட்டுச் செல்வது என் மனதிற்கு ஏற்றதாக இல்லை.

அடுத்ததாக, என் கணவர் உயிர் வாழும் வரை, சொல்லொண்ணா **தீமை இழைத்த என்னுடைய பணிப்பெண்,** என்னோடு சினேகம் கொண்டிட விரும்பியதைக் கண்டேன். முன்பிருந்த நிலையிலிருந்து மாறாக, அவளோடு தொடர்பு கொண்ட யாவரிடத்திலும் "என்னுடைய நற்குணங்களை எடுத்துக் கூறி புகழ்ந்தாள்!" என அறிந்து வியப்படைந்தேன். இப்போது அவள், எனக்குச் செய்த பணிவிடை 'மனந்திரும்பிய உணர்வோடு' செய்ததைக் கண்டும் வியப்படைந்தேன்.

**இந்த நாட்களில், அவள் என்னிடம், தான் பொய் குற்றம்சாட்டி தீமை செய்த ஒவ்வொரு செயலுக்காகவும் மனந்திரும்பிய உள்ளத்தோடு என்னிடம் மன்னிப்பு கேட்டாள்! நான் ஜெனிவா சென்றபிறகு, என் பணிப்பெண் காலத்திற்கு முன்பே மரித்துவிட்டாள் என்ற செய்தி கேட்டு வருந்தினேன்!**

மேலும், கர்த்தருடைய மேஜையில் எனக்கு நன்மை வழங்கிய பாதிரியார் ஓர் சிறந்த ஆவிக்குரிய மனிதர்! திடீரென்று, மிகப்பெரிய அந்தஸ்தான சமூகசேவை பொறுப்பிற்கு அவர் செல்லும்படி சோதிக்கப்படுவதாக என்னிடம் கூறினார். நான் பெற்றிருந்த உள்ளான உந்துதலின்படி "நீங்கள் சோதிக்கப்படும் அந்தஸ்தான பொறுப்பு, 'உங்களுக்கு கண்ணியாக' அமைய முடியும். இது தேவனுடைய அழைப்பு அல்ல" என உறுதிபடக் கூறினேன். அதற்கு அவர் "நீங்கள் சொல்வது சரிதான்! அதன்படியே இந்த ஐஸ்வரியமமும் அந்தஸ்தான

பணியை நான் புறக்கணித்திட தீர்மானித்து விட்டேன்'' எனக் கூறினார். **ஆனால் இருமனம் கொண்ட அவர், தேவபணியை துறந்து அந்த சமூக உயர் பணிக்கு சென்று விட்டார்.** அதனிமித்தம், அவர் என்னை எங்கெல்லாம் கண்டாரோ, அங்கிருந்து தூரச் சென்று மறைத்துக் கொள்வார். பணம் மிகுதியாய் கிடைத்தாலும், அந்தஸ்து அவருக்கு புகழ்மாலை சூடினாலும், **தேவகிருபை அவரை விட்டு விலகி,** சொற்ப வயதில் இறந்து போனார்!

மற்றொரு சம்பவத்தில், ஒரு புனித மடத்தில் ஊழியம் செய்த கன்னியாஸ்திரீயை நான் அறிவேன். அவர்களுடைய பரிசுத்தமாகும் ஜீவியம் நல்ல முதிர்ச்சி நிலைக்கு நெருங்கி வந்தது. ஆனால், அவர்களின் பரிசுத்தத்தை நாடும் அணுகுமுறை புனித மடத்திலிருந்த அநேகருக்கு இடறலைப்போல் தோன்றியது. வீண் சிரிப்போ, சலசலப்பாய் பேசாமலிருப்பதோ, பரிசுத்தத்திற்கேற்ற சோக முகத்தை கொண்டிருப்பதோ ஆகிய இவைகளை வைத்து, அவர்களை தனி அறையில் இருக்கும்படி செய்து விட்டார்கள்! ஆனால், அவர்களிடம் நான் சென்று சந்தித்த போது 'களங்கமற்ற அவர்களின் பரிசுத்த மேன்மையை' நான் கண்டேன். இந்த நிலையில், ''மற்றவர்கள் தன்னை புத்தி தடுமாற்றம் கொண்டதைப்போல் காண்கிறார்களே!'' என என்னிடம் கூறி வருந்தினார்கள்.

**நான் அவர்களிடம், 'புத்தியீனன்' என உங்களுக்கு தரப்பட்ட பட்டத்தை மனப்பூர்வமாய் ஏற்று தாங்கிக் கொள்ளுங்கள்! அது ஏனென்றால், ஏரோது அரசனுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து நின்றபோது உங்களுக்கு தரப்பட்ட பட்டமே அவருக்கும் இழிவாய் தரப்பட்டு பரிகசித்தார்கள்! என கூறினேன்.**

இவ்வாறு நான் சுட்டிக்காட்டியது, அவர்களுக்கு மிகுந்த அமைதியைத் தந்தது! அவர்களின் இந்த ஆவிக்குரிய நிலையை, தலைமை கன்னியாஸ்திரீயிடம் விளக்கிக் கூறினேன். 'தேவனுக்கு பிடித்தமில்லாத' **மனுஷீக ஈர்ப்புகளிலிருந்து விடுவிக்கவே** இவைகளை கர்த்தர் அனுமதித்திருக்கிறார் என விளக்கி தலைமை கன்னியாஸ்திரீயிடம் கூறினேன்.

நான் கூறிய ஆவிக்குரிய ஆலோசனையை மிகுந்த தாழ்மையுடன் ஏற்றுக்கொண்ட கன்னியாஸ்திரீயின் ஜீவியம், புது மறுமலர்ச்சி அடைந்தது! இவை அனைத்தையும் கண்ணுற்ற தலைமை கன்னியாஸ்திரீ ஒரு கடிதம் எனக்கு எழுதினார்.

**அந்த கடிதத்தில் ''என் பிரிய மகளே, நீ சரியாக பகுத்தறிந்து 'மனுஷீக அபிப்பிராய' பிடியிலிருந்து அந்த பக்தியான கன்னியாஸ்திரீயை விடுதலை செய்த செயல் மெய்யாகவே மகத்துவமானது. மனுஷருடைய அபிப்பிராயத்**

**திற்காக வாழ்வது ஒரு கண்ணி என்ற உண்மையை நானும் விளங்கிக் கொண்டேன். இப்போது அந்த கன்னியாஸ்திரீ முன்பைவிட அதிகமான தூய்மையின் பாதைக்குள் மகிழ்வுடன் பயணிப்பதை காண்கிறேன்" என கடிதம் எழுதினார்கள்.**

*மெய்யாகவே, அந்த கன்னியாஸ்திரீயின் 'ஆவிக்குரிய சிக்கல்' இன்னது என ஒருவரும் அறியாத நிலையில் 'அதை' கர்த்தர் எனக்கு காண்பித்தார். இச்சமயத்தில்தான், "வேறு பிரித்து, ஆவியை பகுத்தறியும் வரத்தை" கர்த்தர் எனக்கு அருளியதை உளமாற அறிந்தேன். பிற்காலங்களில், இந்த வரம் இன்னும் அநேகருக்கு விடுதலை கொடுத்ததையும் கண்டு ஆண்டவரை மகிமைப்படுத்தினேன்!*

– *மேடம் குயான்*

---

## இன்று சாத்தான் 'யார் நிமித்தம்' கலங்குகிறான்!

**தே***வனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்று வாழும் முழு இருதய சீஷர் குழுவில், மற்றொரு எலியா எந்த சமயத்திலும் எழும்பி வருவான்! அல்லது தோள் நிமிர்ந்த தானியேல்..... அல்லது சத்தியத்தை கர்ஜிக்கும் லூத்தர்..... அல்லது சுவிசேஷ படைகொண்டு சாத்தானுடைய இராஜ்ஜியத்தை கொள்ளையிடும் ஒரு வில்லியம் பூத் ..... போன்ற தீவிர வீரர்கள் எந்த நேரத்திலும் எழும்பி வந்து விடுவார்கள் என்பதிலேயே சாத்தான் வெகுவாய் இன்று கலங்கி நிற்கிறான்!*

*தேவனுடைய வார்த்தையை காட்டுத் தீ போல் பரவச் செய்யும்* **ஃபின்னி** *அல்லது சாத்தானுடைய கோட்டையை தகர்க்கும்* **எட்வர்ட்ஸ்** *போன்ற ஜெப மாந்தர்கள், ஆகிய இவர்களால் ஏற்படும் அபாயத்தை சாத்தானால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இவ்வாறு நிரந்தர தீவிர எதிரி தனக்கு வந்துவிடக்கூடாது என்பதை தடை செய்வதற்காகவே "புதிதாய் இரட்சிக்கப்பட்டவர்களை அழிப்பதற்கு" சாத்தான் துடிதுடித்து நிற்கிறான்.*

*ஏனெனில், தனக்கு எதிராய் உருவாகும் தீவிர போர்வீரனை அழிப்பதற்குரிய ஒரே உபாயம், அவர்கள் வளருவதற்கு முன்பே அவர்களை அழிப்பதுதான்! இஸ்ரவேல் தேசத்தை விடுவிக்க* **பிறந்த மோசேயை** *அழித்திட அவன் வகை தேடினான்! அவ்வாறாகவே, உலகப் பாவங்களுக்காக மரித்திட* **பிறந்த குழந்தை இயேசுவை** *வளர விடாமல் தடுக்க முயற்சித்தான்!*

**ஒன்று, அவர்களை அழிக்க வேண்டும் அல்லது, அவர்கள் வளர்ச்சியை குன்ற வைக்க வேண்டும்! இதுவே, சாத்தான் தன் ராஜ்ஜியத்திற்காக மேற்கொண்டிருக்கும் யுத்தமாகும்!**

*இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்களை சரீர பிரகாரமாய் அழிப்பதில் பிரயோஜனமில்லை என சாத்தான் எண்ணுகிறான். யுத்தத்தில் மரித்துவிட்ட வீரன், தன் போர் படைக்கு அனல் மூட்டும் 'மாதிரியாய்' மாறி விடுகிறான்! கிறிஸ்துவுக்கு பெருமையும் தேடித் தருகிறான்! இதற்கு மாறாக, சத்துருவின் முதல் வெடிகுண்டு சத்தம் கேட்டவுடன், சண்டையிட மறுத்து பின்வாங்க ஓடுபவனே, தன் விசுவாச குடும்பத்திற்கும், தன் இரட்சகருக்கும் அவமானத்தை தேடி தருகிறான். இதுபோன்றவர்கள் சத்துருவின் முகத்திற்கு வெற்றிச் சிரிப்பையும், சர்வ சங்க கிறிஸ்துவின் சபையின் முகத்திற்கு அவமானத்தையும் கொண்டு வந்து சேர்க்கிறார்கள்!*

*ஆகவே, கிறிஸ்துவின் நாமத்தை உச்சரிப்பவர்களின்* **ஆவிக்குரிய வலிமையை அழித்து விடுவதில்,** *இன்று சாத்தான் ஜெயம் பெற்று கொக்கரிக்கிறான். ஒரு சராசரி கிறிஸ்தவ வாழ்க்கையில் அமர்ந்து விட்டவர்கள் பிசாசின் சாம்ராஜ்ஜியத்திற்கு 'அச்சுறுத்தல்' கொண்டவர்களல்ல! இவர்கள் கடும் சூழ்நிலையில், ஜெப ஜீவியத்திற்கு உயர எழும்பிப் பறக்க முடியாத 'வியாதியுற்ற கழுகுகள்!' தன் பரதேசீ பயணத்தில், வழியில் பறித்த மாய - லோக மயக்கப் பூக்களை முகர்ந்து, பயணத்தை இழந்து அமர்ந்துவிட்ட கோழை கிறிஸ்தவர்கள்! ஆம், சாத்தான் இவ்விதமாகவே இன்றைய நாட்களில் தன்னுடைய ராஜ்ஜியத்திற்கு வெற்றிக்கொடி நாட்டுகிறான்!*

*இன்னும் சிலரை, போதுமான போதனையில்லாத நிலை அல்லது கள்ள உபதேசங்கள் அல்லது உலகத்திற்கு குளிர்ந்து போன கெட்ட மாதிரியான திரள் கூட்டங்கள், அல்லது* **பெற்றுக்கொண்ட சத்தியத்திற்கு** *சமரசம் கண்ட கூட்டங்கள், அல்லது கிறிஸ்துவின் வீரத்தை இழந்து விட்டு, கல்வி நிலையங்களையும், ஆஸ்பத்திரிகளையும் நடத்தும் சமுதாய சேவகர்கள்..... ஆகிய இவர்கள் யாவரும், சாத்தானின் எல்கைக்குள் மீண்டும் பிடிக்கப்பட்டவர்களாகிப் போனார்கள்! இன்றைய சபைகளில் அமர்ந்திருக்கும் அனைவரையுமோ அல்லது பாதிப் பேர்களையோ 'வெறும் ஆவிக்குரிய கண்காட்சியாய்' அமரச் செய்து விட்டான் இந்த சாத்தான்!*

**இவ்வித அரை- குறை மக்களைக் கொண்டு, திரள் கூட்ட பாஸ்டர்மார்கள் திருப்தியாய், தொடர்ந்து 'கண்காட்சி' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித கண்காட்சியாய் அமர்ந்திருப்பவர்களை, தங்கள் லௌகீகமான புன் சிரிப்பினால் "அங்கீகாரம் வழங்கி" அந்த ஆத்துமாக்களை நாசப்படுத்தும் தலைவர்களும் ஏராளம் ஏராளமாய் பெருகிவிட்டார்கள்!**

*இன்று சாத்தான் கடும் பகையாய் எதிர்த்து நிற்கும் கூட்டம் ஒரே*

*ஒரு வகையினர்தான்! இவர்கள், கிறிஸ்துவின் உயர்ந்த ஜீவியத்தை இலக்காய் வைத்து முன்னேறுபவர்கள்! எப்போதும் ஆவியில் நிறைந்தவர்கள்! ஆவியில் நிறைந்த வைராக்கிய ஜீவியம் இலகுவானது என எண்ணிக் கொள்ளாதவர்கள்! இவர்கள் மாத்திரமே சத்துருவின் தாக்குதல் முனையில் நிற்பவர்கள்...... சாத்தானோடு 'கடும் யுத்தம்' இவர்களுக்கு மாத்திரமே உண்டு! ஜெயம் பெற்ற கிறிஸ்துவின் அடிச்சுவட்டில், இவர்கள் தொடர்ந்து மனம் தளராது விசுவாசத்துடன் முன்னேறும் போது....... நிச்சயமாய் கிறிஸ்து சம்பாதித்த முழு வெற்றியையும் அடைந்தே தீருவார்கள். ஜெயத்திற்குரியவர்கள் கண்டிப்பாய் ஜெயிப்பார்கள்! அவர்களைக் குறித்து, நான் இங்கே குறிப்பிட வரவில்லை! அதற்கு பதிலாய் ஆவிக்குரிய கடும் போராட்ட வாழ்க்கையிலிருந்து தப்புவதற்கும், இன்றைய கிறிஸ்தவ ஜீவியத்தில் குளிர்ந்து போனவர்களோடு தாங்களும் பின்மாறி அமர்ந்திருக்க தீர்மானித்தவர்களைக் குறித்துமே, நான் அக்கறை கொண்டிருக்கிறேன். இதைத்தான், இந்த நாள் வரை சாத்தான் உங்களில் விரும்பியிருந்தான்.*

*நீங்கள் ஆவிக்குரிய போராட்டத்தை தவிர்த்து அமரப்போகும் இடம் 'வல்லமை - இழந்த' இடம்! கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு உங்களின் தீவிர வளர்ச்சியை குன்ற வைத்திடும் இடம்! இருளின் சாம்ராஜ்ஜியத்திற்கு ஆர்ப்பரிப்பை ஏற்படுத்தும் இடம்! இப்படி யொரு சமரசம் ஏற்படுத்தும்* **ஒத்த வேஷத்திற்கு இணங்குவது நியாயமா?**

*இவ்வித சமரசம், ஆவிக்குரிய போரின் உக்கிரத்தை அணைத்து விடும் என்பதே உண்மை! உங்கள் போரிடும் ஆயுதங்களை துருப் பிடிக்க வைத்திடும் சாத்தானுக்கோ கொள்ளை மகிழ்ச்சி!* **போரில் பின்னடைவால் ஏற்பட்ட சமாதானம்....** *உங்களை முன்னேற விடாமல், ஜெயிக்க விடாமல் "தேங்கி நின்று விட்ட - சமாதானம்" என்பதை மறந்து விடாதீர்கள்! நித்திய சுதந்தரர்களோ, 'தேங்கி நிற்க மறுத்து' தீப்பிளம்பின் உத்தம யுத்தத்தில் தொடர்ந்து நிற்பவர்கள்! கிறிஸ்துவின் ஜெயக்கொடி ஒன்றே தங்களின் கொள்கை என கொண்டவர்கள்! ..... அது, நீங்களாகவே ஏன் இருந்துவிடக் கூடாது?!*

*– A.W. டோசர்*

---

## 'ஜெபமே' என் அடைக்கலப் பேழை!

**மி**ஷனரி *ஜான் கெர்ஷா* (John Kershaw) *தன் ஜெப வாழ்வின் அனுபவத்தை கீழ்கண்டவாறு கூறினார்: "என் ஜீவியமானாலும், ஊழியமானாலும், என் நெஞ்சத்து அனலைப் போக்கி ஆறுதல் தருவதெல்லாம்,* **என் வழக்கமான ஜெப ஸ்தலமேயாகும்!** *குடிசை வாழ்வே*

என் அதிகபட்சமாய் இருந்தபடியால், தனித்து ஜெபிக்க பல்வேறு நூதன இடங்களைத்தேடி சென்றிருக்கிறேன்! அப்படியொரு ஜெபஸ்தலம் தான்...... நான் அதிக நாட்களாய் உபயோகித்த ஒரு வயலின் மூலையில் இருந்த ஓர் "காய்ந்த குழி" ஆகும்! நாள்தோறும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் நான் இந்த வறண்ட குழிக்குள் ஜெபிக்கும்படியாக வந்து கொண்டிருந்தேன். இந்த நாட்களில் நான் ஜெபத்தில் செலவிடும் அந்த பள்ளத்தினுள் ஒரு குருவி கூடுகட்டத் தொடங்கினது. பள்ளத்தினுள் கூடு கட்டிக் கூட்டின்மேல் படுத்திருந்த அந்தக் குருவிக்கு ஒரு சிறிய தொந்தரவும் கொடுக்காத வகையில், மிகவும் ஜாக்கிரதையாக என் ஜெபதியானங்களில் நான் ஈடுபட்டு வந்தேன். எனது அன்பையும், கருணையையும் நன்கு புரிந்துகொண்ட அச்சிறிய பறவை அதன்பின்னர் எனக்கு அஞ்சாமல், நிம்மதியாய் தன் காரியத்தைக் கவனித்து வந்தது.

**சிறிய ஜீவராசிமுதல் தாம் சிருஷ்டித்த அனைத்து உயிரினங்களுக்கும், தமது கரத்தைத் திறந்து அவற்றின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கின்ற அன்பின் தேவனுக்கு நேராக என் ஆத்துமாவையும், கண்களையும் ஏறெடுத்த எனக்கு.... அந்த சிறிய குருவி, என் ஜெப ஏணிக்கு விசுவாச படிக்கட்டு அமைத்ததாகவே நான் கண்டேன்!**

பள்ளத்தைச் சுற்றி வளர்ந்திருந்த உயர்ந்த புற்கள் வெட்டப்படும்வரை நான் இங்குதான் தொடர்ந்து வந்து என் உள்ளத்தை ஆண்டவரிடம் ஊற்றிக்கொண்டிருந்தேன்.

இவ்வாறாக கூறிய இந்த தாசன், "என் ஆத்துமா நீரோடைகளை வாஞ்சித்துக் கதறி அலறும் மான்களைப்போல கர்த்தரைத் தொடர்ந்து வாஞ்சித்துக் கதறியது" என கூறினார். நமது கதறுதலின் சத்தத்தைக் கர்த்தர் கேட்டு நம்மேல் மனதுருகி "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள். நீங்கள் வந்து, பணமின்றி விலையுமின்றித் திராட்ச ரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசாயா.55:1) என்று நம்மைக் கூவி அழைத்து நம் ஆத்துமாக்களைத் தம் ஜீவத்தண்ணீரால் தாகம் தீர்ப்பது மாத்திரமல்ல, நம்மில் மற்றவர்களும் தாகம் தீர்த்துக் கொள்ளத்தக்கதாக ஜீவத்தண்ணீருள்ள நதிகளை நம்மிலிருந்து புரண்டோடவும் பண்ணுவார் (யோ.7:38).

என் வாழ்வின் அல்லது என் ஊழியத்தின் அனைத்து வறட்சியான தேவைகளுக்கும் "என் அடைக்கல பேழையாய்" இருந்ததெல்லாம், நான் வழக்கமாய் ஜெபித்திடும் "என் ஜெப ஸ்தலமே" ஆகும்!!

– ஜான் கெர்ஷா

## நம்மை காத்தவர், இனியும் காப்பார்!

*வல்லூறு அல்லது பருந்துகளின் வருகையை காகங்கள், மைனாக்கள் போன்ற பறவைகள் குரல் எழுப்பி.... சிறிய சிறிய பறவைகள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வசதியாக அவைகளை முன்கூட்டியே எச்சரித்து விடுகின்றன! இப்படி எல்லாம் தனது அற்பமான ஜீவராசிகளுக்கு பாதுகாப்பை ஞானமாக வழங்கும் தேவன் சாவாமையுள்ள தமது சாயலாக மறுபடியும் பிறந்த அவரது பிள்ளைகளுக்கும், சாத்தானுக்குமுள்ள வாழ்வின் கடும் போராட்டத்தில் நமக்கு ஒத்தாசையாக எழுந்து வந்து நமக்காக யுத்தம் செய்யும் கர்த்தராக இருப்பார் என்பது அதிக நிச்சயமல்லவா?*

*கர்த்தருடைய ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் கானான் தேசம் முழுமையையும் அவர்கள் சுதந்தரித்த நாள் வரையும் சிறிதும் பெரிதுமான பல யுத்தங்களை அவர்கள் செய்ய வேண்டியதாக இருந்தது. அந்த* **அனைத்து யுத்தங்களையும் தேவனே முன்நின்று நடத்தி** *வைத்ததாக வேதாகமம் நமக்குச் சொல்லுகின்றது : "உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர்தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாக செய்த எல்லாவற்றைப் போலவும் வனாந்திரத்தில் செய்து வந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்" என்றே வாசிக்கிறோம் (உபா.1:30).*

*இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு எதிராக யுத்தம் பண்ண புறப்படுகையில், ஆசாரியன் வந்து அவர்களிடம் சொல்லும் வார்த்தைகளை கவனியுங்கள்: "இஸ்ரவேலரே கேளுங்கள், இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தம் செய்யப்போகிறீர்கள். உங்கள் இருதயம் துவளவேண்டாம்! நீங்கள் அவர்களைப் பார்த்து பயப்படவும் கலங்கவும், தத்தளிக்கவும் வேண்டாம்! உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும், உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்றே கூறினான்! (உபா 20:2,3,4).*

*தமது தாசனாகிய தாவீதை, அவனது பிராண பகைஞனாகிய சவுலுக்கு தேவன் ஒருபோதும் ஒப்புக்கொடுக்கவே இல்லை. நேருக்கு நேர் இருவரும் ஒன்றாக அரண்மனையில் இருந்தபோது, தனது கூர்மையான ஈட்டியை சவுல் அரசன் தாவீதின் மார்புக்கு நேராக எறிகின்றான். ஆனால், அந்த ஈட்டி தாவீதின் நெஞ்சை ஊடுறுவிச் செல்லாதவாறு தேவகரம் மாத்திரமே அந்த இடத்தில் அவனைப் பாதுகாத்தது.*

**"சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை" என்று தாவீதே கூறியுள்ளார் (2சாமு 1:22). ஆயினும் அந்த குறிப்பிட்ட நாளில் தேவன் அந்த பட்டயத்தை தமது தாசன் நிமித்தமாக வெறுமையாக திருப்பி அனுப்பி விட்டார்.**

*சவுல் அரசனும், அவனது ராணுவமும் ஒன்று சேர்ந்து தாவீதை காட்டிலுள்ள ஒரு கௌதாரி பறவையை வேட்டையாடுவதுபோல பல நாட்கணக்காக தேடி அலைந்து வேட்டையாட நினைத்தும் அந்த எண்ணத்தை கர்த்தர் நிர்மூலமாக்கினார். தமது அபிஷேகிக்கப்பட்ட பிள்ளையான தாவீதை அவர் கண்மணிபோல பாதுகாத்து முடிவிலே தமது நித்திய மகிமையிலே பூரண ஆயுசு காலத்திற்குப் பின்னர் தன்னோடு சேர்த்துக் கொண்டார்.*

*– ஸமீ நேபாள மிஷனெரி*

---

## அன்பற்ற எரிக்கும் வெயிலில் 'தெய்வ அன்பு' வாடுவதில்லை!

*தெய்வ அன்பின் வழி செல்ல மனப்பூர்வமாய் தீர்மானித்தவர்களாய் இருந்தால், பாடுபடுவதற்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு முன்சென்ற நம்முடைய குருவாகிய கிறிஸ்துவும் இந்த அன்பின் வழியாகவே கடந்து சென்றார். நம் சூழ்நிலைகள், நம் மனுஷீக அன்பையெல்லாம் மாயமாய் மறைந்து போகச் செய்து,* **எரிக்கும் வெயிலில்** *(அன்பற்ற சூழலில்) வாடி வதங்கிப் போகும் புல்லைப் போலன்றோ நாம் உணர்கின்றோம்.*

*உதாரணமாய், ஊழியம் செய்யும்படி தேவன் நமக்குத் தந்த ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களை, தேவனுடைய பிள்ளைகளாகும்படி வழிநடத்தி.... அவர்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்! எப்படியாவது அவர்களும் சபை ஊழியத்திற்கு பயன்பட்டு, அநேகரை ஆசீர்வதிப்பதற்கு தகுதியடைவார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறோம்! இவ்வித ஊழியத்தில், கடுமையான பிரயாசங்கள் எடுத்து, நம் சரீர சுகத்தைக்கூட இழந்திருக்கிறோம்! ஆனால், நாம் பாடுபட்டு உழைத்த ஜனங்களோ, எதிர்பார்த்த பலனை தராமல், நம் நம்பிக்கை யாவையும் கவிழ்த்து விடுகிறார்கள்! இவ்வித சூழ்நிலைகளில்தான் 'பெரும் சவாலை' நாம் சந்திக்கிறோம்.* **இந்நிலையில், ஆத்துமாவிற்காக உழைத்திடத் தூண்டிய கல்வாரி அன்பிலிருந்து நாம் விலகிச் செல்வது நியாயமாகுமோ?** *அல்லது, கிறிஸ்துவின் கனிவான அன்பில் நிலைத்திருந்து, "பிதாவே இவர்களை மன்னியும்.... தாங்கள் செய்வது இன்னதென்று அவர்கள் அறியாதிருக்கிறார்களே!" என தொடர்ந்து நாம் ஜெபித்திடக் கூடுமோ? கூடும்.... நிச்சயமாய் கூடும்! ஏனெனில், கல்வாரி அன்பு எக்காலத்தும் ஒழிவதில்லை!*

**காரிருளான இவ்வேளையில், "தேவரீர் என் இருதயத்தில் தோன்றும் எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டு உம்முடைய அன்பை எனக்குள் ஊற்றிவிடும்!" என கதறும் நம் உள்ளத்தில், கல்வாரி நாதன், தம் அன்பை நிச்சயமாய் ஊற்றுவார்!**

*இவ்வித கதறலின் கூக்குரலுக்கு காத்திருக்கும் தேவன், நாம் பெற்றிருக்கும் "கல்வாரி அன்பின் ஏக்கத்திற்காய்" மனம் மகிழ்வார்! ஏனெனில் 'எனக்கும் தேவ அன்பு வேண்டும்!' என, ஏனோதானோ என்று ஜெபிக்கிறவர்களிடத்தில் தேவன் அக்கறை காட்டுவதில்லை. தன் இருதயத்தின் முழுமையையும் முன்வைத்து தேவனைத் தேடுகிறவர் களையே, அவர் வாஞ்சித்து நோக்குகிறார்.*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## 'அன்னிய பாஷையோடு' அபிஷேகம் பெற்றேன்!

**கொ**டிய வறட்சியான **என் சோர்வின் நாட்களில்,** நான் இதுவரை சந்தியாத ஒரு சகோதரி என் வீட்டிற்கு வந்தார்கள். அந்த சகோதரி "நாம் சேர்ந்து ஜெபிக்கலாமா?" எனக் கேட்டார்கள். அதற்கு சம்மதித்து என்னுடைய படுக்கை அறைக்குச் சென்று ஜெபித்தோம். மிகவும் **பசுமையும் உற்சாகமும் நிறைந்த அந்தப் பெண்ணின் ஜெபம்** எனக்கு அதிக ஊக்கம் அளித்தது.

**'என்னுடைய ஜீவியத்திலும்' அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட பசுமையான உற்சாகம் எனக்கும் வேண்டு மென்ற வாஞ்சை ஏற்பட்டது!**

*அடுத்த முறை, அந்த சகோதரியின் வீட்டில் வந்து ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, அந்த சகோதரியின் வீட்டிற்குச் சென்று, நாங்கள் இருவரும் ஜெபிக்கத் தொடங்கினோம். அப்போது நான், "ஆண்டவரே, என் வாழ்க்கையில் ஏதோ சம்பவித்து விட்டது. ஒரு காலத்தில் நான் உம்மோடு அவ்வளவாய் நெருங்கி வாழ்ந்தேன். ஆனால் இப்போதோ உம்மை விட்டு தூரமாய் நிற்கிறேன். தயவாய் எனக்கு இரங்கி, உம்மண்டையில் என்னை இழுத்துக் கொள்ளும்" என மனபாரத்துடன் ஜெபித்தேன்.*

*அந்த ஜெப வேளையில், நான் சிலரிடம் வைத்திருந்த தவறான மன நோக்கங்களையெல்லாம் ஆண்டவர் எனக்கு காண்பிக்கத் துவங்கினார். நானும், என் தந்தையும்கூட மனதில் ஒருவரைவிட்டு ஒருவர் தூரமாய் இருந்தோம். என் கணவருடைய பெற்றோர்கள் என்னிடத்தில் பிரியமாய் இருந்தாலும், நானோ அவர்களுடைய வீட்டில் மகிழ்ச்சியிழந்த பெண்ணாகவே இருந்தேன். இந்த நிலையில், கர்த்தர் என் கண்களைத் திறந்தார்! என்னைப் பார்த்து "பிரச்சனைகள்*

மற்றவர்களிடத்தில் இல்லை.... உன்னிடத்தில்தான் உண்டு!" எனக் கூறி விட்டார். உடனே நான் கதறி அழத் தொடங்கிவிட்டேன். "ஆண்டவரே என்னை மன்னியும்! நான் மோசமான பாவி. வெளித் தோற்றத்தைப் பார்த்து, ஜனங்கள் என்னை நல்லவள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், என் உள்ளத்திலோ கசப்பு நிறைந்த வளாகவே இருக்கிறேன்!" என கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டி ருந்த வேளையில், தேவன் என் இருதயத்தை தொடுவதாக உணர்ந்தேன். தேவனுடைய கரத்தில் அமர்ந்திருக்கும் ஒரு சிறு பிள்ளையைப் போலவே எனக்குத் தோன்றியது. என்னை அன்புடன் தூக்கி வைத்துக் கொண்ட அவரது கரத்தின் ஆறுதலில், என் கண்ணீ ரெல்லாம் உடனே நின்று விட்டது. மீண்டுமாய், என் இருதயத்தை சந்தோஷத்தாலும் சமாதானத்தினாலும் தேவன் நிறைத்தார்.

மிகுந்த நன்றியுடன் நான் தேவனை துதித்துக் கொண்டிருந்த சமயம் "நான் வேறு பாஷையில் பேசிக் கொண்டிருப்பதைப்போல் உணர்ந்தேன்" அது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏனெனில், நான் பிரதரன் சபையிலிருந்து வந்தவள். **அன்னிய பாஷை பேசும் வரத்தை** நான் விசுவாசிக்கவில்லை. ஆகவே, ஏதோ வேறு பாஷையில் பேசிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமாய் இல்லை! எனவே, நான் மீண்டும் ஆங்கிலத்தில் ஜெபிக்கத் தொடங்கினேன். இப்போது, ஆங்கிலத்தில் ஜெபிப்பது தான் எனக்குப் போராட்டமாய் இருந்தது.

**தேவன் தந்த புதிய பாஷையில் ஜெபித்திடவே எனக்கு எளிதாய் இருந்தது! எனவே, என் முழு இருதயத்தையும் ஆண்டவருக்கு முன்பாக ஊற்றி, அந்த புதிய பாஷையில் தேவனை மனதார துதிக்கத் தொடங்கினேன்!**

ஆம், நான் இந்த உலகத்தில் இல்லாதது போலவே என் ஆவியில் உணர்ந்தேன்! சொல்லி முடியாத சந்தோஷத்தோடும், சமாதானத் தோடும் என் வீட்டிற்குத் திரும்பி, நடந்த அனைத்தையும் என் கணவரிடம் விவரித்தேன்.

அந்த நாட்கள் தொடங்கி, என் ஜீவியத்தில் ஏற்பட்ட உண்மை யான மாற்றத்தை என் கணவரும் கண்டார்! ஆம், **என் வாழ்வில் ஒரு புத்துணர்ச்சி பெற்றேன்** என்றே கூற வேண்டும். வறண்ட பாழ் நிலமாய் இருந்த என் இருதயம், திடீரென்று பசுமை நிறைந்ததாய் மாறியது!! அந்த நாளில் நான் பெற்ற சந்தோஷமும் சமாதானமும் இன்றுவரை என்னை விட்டு நீங்கவில்லை! ஓர் ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, என்னை நடத்திய பரிசுத்தாவியானவருக்கு நான் மிகுந்த நன்றியுள்ள வளாய் இருக்கிறேன்!

*– ஆனி சகரியா பூணன்*

## நம் பயணம், பரலோகம் நெருங்குவதை அறிவது எப்படி?

புகைவண்டியில் ஒரு பட்டணத்தை நோக்கி நீங்கள் சென்றால், அந்தப் பட்டணம் நெருங்கி விட்டது என்பதை நீங்கள் அறிந்திட முடியும். ஏனென்றால், தென்னை மரங்கள் நிறைந்த அந்த பட்டணத்தின் 'ஒரு பகுதி தென்னை மரத்தை' கண்டவுடன், நீங்கள் சேர வேண்டிய பட்டணம் நெருங்கி விட்டது என்பதை நிச்சயமாய் அறிவீர்கள். சங்கீதம் 16:11-ம் வசனம் கூறுவதோ **'நித்திய ஜீவ பட்டணம்' பயணிக்கும் ஜீவமார்க்கத்தை** குறிப்பிட்டு கூறுகிறது. நித்திய ஜீவமார்க்கம் நடத்தும் பரலோகத்தை நீங்கள் நெருங்கி வருவதை எப்படி அறியலாம்? அந்த வசனம் குறிப்பிடும் **'உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம்'** 'உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பம்' என்பதே நித்திய ஜீவ பட்டணத்தின் குணாதிசயமாய் இருக்கிறது.

> **ஆகவே, உங்கள் கிறிஸ்தவ ஜீவிய பயணத்தின் வருடங்கள் செல்லச் செல்ல பரிபூரண ஆனந்தம் (Fullness Of Joy) உங்களுக்குள் அதிகமாகிக் கொண்டே வரும்! மேலும் நித்திய ஜீவ பட்டணத்தில் வாசம் செய்யும் "தேவனுடைய சமூகம்" உங்கள் இருதயத்தில் நிறைந்து வருவதையும் காண்பீர்கள்!**

மத்.25:21-ம் வசனம் "எஜமானின் வீட்டிற்குள் பிரவேசிக்கும்" பிரவேசிப்பதை குறிப்பிடுகிறது. **நம் ஆண்டவராகிய எஜமானின் வீட்டின் பெயர் "சந்தோஷம்"** என்பதாகவே வாசிக்கிறோம். 21-ம் வசனம் குறிப்பிடுகிறபடி, நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் பயணமும், ஊழியத்தின் பயணமும், ஆண்டவருடைய வீடாகிய 'சந்தோஷத்திற்குள்' பிரவேசிப்பதாகவே இருக்கிறது. நம் எஜமானனுடைய சாயலுக்கு ஒப்பாய் மாறுவது, நாம் அடைந்திடும் "அவரது சந்தோஷத்தின் சாயலே" ஆகும்! அவருடைய இந்த சாயல்தான் நம்மில் நிலைத்திருக்க வேண்டும்! 'என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கக் கடவது!' என்றே ஆண்டவர் கூறினார்.

எரேமியா 29:9-ம் வசனம் தேவன் நமக்கென வைத்திருக்கும் அவரது தீர்மானத்தை எடுத்துக் கூறுகிறது. அது என்னவென்றால் "நல்ல எதிர்காலமும்! நம்பிக்கையுமே!" (A Future and A Hope) என வாசிக்கிறோம். இதற்கு நேர் எதிர்மறையான குணாதிசயமே நம்மைக் குறித்த சாத்தானுடைய நோக்கமாயிருக்கிறது. "தீமையே" அந்த எதிர்மறையாகும். ஆகவே, இன்று உலகில் சாத்தானை பின்பற்று கிறவர்களுக்கு சந்தோஷமான, எதிர்காலம் இல்லை! மாத்திரமல்ல, தேவனுடைய சாயலாயிருக்கும் 'சந்தோஷத்தை' நம்மிடமிருந்து அழிப்பதற்கும் வகை தேடுகிறான். தேவன் நம்மை கடிந்து திருத்துவது

*கூட, நம்முடைய சந்தோஷத்தின் நிறைவிற்காகவே செய்கிறார்.*


**நாம் பரிசுத்தத்தையும் நீதியையும் பின் தொடரும் வாழ்க்கையில் 'சந்தோஷத்தை இழந்து பின்பற்றும்படி' திரளான மக்களுக்கு பிசாசானவன் இடையூறு செய்கிறான். சந்தோஷம் இழந்த நீதியானது நம்மை பரிசேயர்களாய் மாற்றிவிடும்!**

*நம்முடைய நீதி வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய், கல்லறைக்குள்ளேயே மகிழ்ச்சி இழந்த 'துன்நாற்றமாய்' இருந்து விடக் கூடாது என மத்தேயு 23-ம் அதிகாரத்தில் இயேசு எச்சரித்துள்ளார். இந்த உலகத்தின் சந்தோஷம் சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளது. ஆனால்* **பரிசுத்தாவியினால் உண்டாகும் சந்தோஷம்** *தேவனிடமிருந்து உண்டாகிறது. அது, நித்திய பேரின்பம்! ஏனெனில், நாம் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறபடியால், பரத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் 'ஆனந்த தைலம்' அது, நிலைத்திருப்பதாயிருக்கிறது (எபி.1:9).*

*"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கக்கடவது" (யோவான் 15:11) என்றும் "இயேசுவின் சந்தோஷத்தை நாம் நிறைவாய் அடைய வேண்டும்" என்றும் (யோவான் 17:13), தான் கல்வாரி செல்வதற்கு முன்பாக இயேசு கூறினார். ஆகவே, வாலிபர்களாகிய நீங்கள் உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒருபோதும் சோர்வடையவும், மகிழ்ச்சி இழக்கவும் கூடாது. தேவனுடைய சொந்த குமாரனின் இரத்தத்தினால் உண்டாகிய பாவமன்னிப்பின் புண்ணியத்தைப் பெற்று அவரைப்போலவே மாறும்படி முன்னேறும் ஜீவியத்தில்* **ஆக்கினைக்குள்ளாக** *தீர்க்கப்பட்டு மகிழ்ச்சியை இழப்பதோ! அல்லது பிசாசினால்* **குற்றஞ்சாட்டப்பட்டு** *நம் சந்தோஷத்தை இழப்பதோ ஒருபோதும் கூடாது! (ரோ.8:31-34). எந்த வீழ்ச்சியின் நேரத்திலும் 'ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குகிறதைப்போலவே' தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார் (சங்.103:13). லூக்கா 15-ம் அதிகாரம் "இழந்து போனவர்களின் அதிகாரம்" என கூறுவார்கள். ஆனால் அந்த அதிகாரம் மெய்யாகவே* **"சந்தோஷத்தின் அதிகாரம்!"** *அதன் இரகசியம் என்னவென்றால் "எங்கு மனந்திரும்புதல் உண்டோ, அங்கு சந்தோஷம் குறைவுபடாமல்" தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும்! மனந்திரும்புதல் 'சுவிச்'* (Switch) *என்றால், உடனே எரியும் வெளிச்சம்* (Light) *போன்றதுதான் நம் சந்தோஷம்! இந்த நித்திய பிரமாணத்தை மறவாது 'சந்தோஷத்தின் பாதையில்' நம் வாலிபர்கள் ஓடக்கடவர்கள்! கர்த்தர் உங்கள் மீது, எப்போதும் சந்தோஷமாய் மகிழ்ந்திருப்பார்! (செப்.3:17). ஆமென்.*

*– சந்தோஷ் பூணன்*

## 40 தீரமான சாட்சிகள் (செபாஸ்தே பட்டணம்)
## கிறிஸ்துவுக்காய் 'குளிரில் உறைந்த' வீரர்கள்!



(AD 320)

செபாஸ்தே பட்டணம், இன்றுள்ள துருக்கி நாட்டின் சிபஸ் பட்டணமாகும். லிசினியஸ் என்ற பேரரசன் கிழக்கு பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களை துன்புறுத்தி கொலை செய்தான். அவ்வாறு துன்புறுத்திய கிறிஸ்தவர்களில், மிகவும் கொடூரமான நிகழ்ச்சி தான் ரோமானிய 'கிறிஸ்தவ' சிப்பாய்கள் 40- பேர் ஒட்டுமொத்தமாய் கொல்லப்பட்ட நிகழ்ச்சி!

40- ரோம போர்வீரர்கள், கிறிஸ்தவ விசுவாசத்திற்காய் கொல்லப்பட்ட தியாகம், பிற்காலங்களில் 'தேவ ஆலயங்களில்' அவர்களை நினைவுகூறும் விருந்துநாளாய் அனுசரிக்கப்பட்டது! இவ்வாறு பல ஆண்டுகளாய் நினைவு விழா அனுசரிப்பு விருந்துகளில், 40- கிறிஸ்தவ சிப்பாய்களின் தியாகம் கொஞ்சம் கொஞ்சமாய் மறக்கப்பட்டது. சுமார் 50- ஆண்டுகளுக்குப் பின்வந்த 'பேஸில்' பேராயர் அந்த 40- ராணுவ சிப்பாய் களின் தியாகத்தை எடுத்துக்கூறினார்! மக்கள் மனம்கசிந்து, அனேகர் இரட்சிக்கப் பட்டார்கள்! அவர் தந்த நிகழ்வுகளை கீழே வாசியுங்கள்:

துருக்கி அரசின் இராணுவ ரோமானிய படையிலிருந்த 40 வீரர்கள் "தாங்கள் இன்று முதல் இயேசுவின் தொண்டர்கள்" என பகிரங்கமாய் அறிக்கை செய்தார்கள். கோபமடைந்த லிசினியஸ் பேரரசன் அவர்களை கட்டி இழுத்து, குளிர்பனியில் உறைந்து போன ஆற்றுப் படுகை அருகில் நிறுத்தினான். ஆடையில்லாமல் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த 40 வீரர்களை பார்த்து "கடைசி வாய்ப்பு! உங்களில், கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுவிட ஆயத்தமானவர்கள், இங்கே இருக்கும் வெதுவெதுப்பான குளத்திற்குள் சென்று உயிர் பிழைக்கலாம்" என அறிவித்தான்.

40 பேரில் ஒரே ஒரு சிப்பாய், தான் உயிர் பிழைக்க வெதுவெதுப்பான குளத்தை நோக்கி நடந்து சென்றான்! அவனை அழைத்துச் சென்ற 'அக்லாயூஸ்' என்ற காவலாளி கவனித்து கொண்டிருக்கையில்.... வெது வெதுப்பு குளத்தில் இறங்கிச் சென்ற வீரன் 'மின்னல் அடித்ததைப்போல்' சுருண்டு விழுந்து செத்தான். அதே சமயத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு பேரொளி அங்கிருந்து 39 வீரர்கள் மீது பிரகாசித்ததையும் சாட்சியாக கண்டான். 'அந்த நிமிடமே' தன்னுடைய ராணுவ உடுப்பை களைந்து போட்டு, ஒன்று குறைவாயிருந்த 39 பேரோடு 40-வது நபராக நின்றான். மறுநாள் அதிகாலையில் விறைத்துப் போன 40- வீரர்களின் சடலங்களை லிசினியஸ் பேரரசன் சுட்டெரித்து சாம்பலாக்கினான். இவர்கள் நினைவாக எருசலேமில் ஓர் கிறிஸ்தவ சபை உள்ளது.

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## வாலிபனே, சபை ஆராதனையில் நிர்விசாரம் கூடாது!

ஒரு கிறிஸ்தவ உயிர்மீட்சி கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, கூட்டத்திற்கு வந்த கிறிஸ்தவ வாலிபர்கள், தாங்கள் வாங்கிவந்த தின்பண்டங்களைத் தின்றவாறே, அருகிலுள்ள கோட்டைச்சுவரில் ஏறிஅமர்ந்து, பொழுதுபோக்கும் களியாட்டு உணர்வோடு கூட்டத்தை நிர்விசாரமாக கவனித்ததை அந்தப் பிரசங்கியார் கண்டார். அந்த உத்தம ஊழியர், இந்த வாலிபர்களின் நிலைகண்டு சொல்லொண்ணா வேதனையும் அடைந்தார்!

ஸ்காட்லாந்து தேசத்தில் உயர்மீட்சி ஏற்பட்ட காலங்களில் அங்குள்ள மக்கள் அழுது கொண்டே தேவனுடைய செய்திகளை கேட்டிருக்கின்றனர்! திரள் கூட்டத்தின் நடுவில் சார்லஸ் பின்னி பேச எழுந்தவுடன் ஜனங்கள் பாவத்தால் குத்துண்டு அழுது மனந்திரும்பினர்! தேவ ஊழியர் ஜான்வெஸ்லி பிரசங்கித்த போது, ஆவியானவரின் ஆளுகையில் ஈர்க்கப்பட்ட மக்கள் அவரவர் பாவத்தி லிருந்து கண்ணீருடன் விடுதலை பெற்றார்கள்! என, திருச்சபை சரித்திரங்களில் நாம் காண்கிறோம். ஆனால், இன்றோ.... தேவபக்திக்குரிய காரியங்கள் முற்றிலும் எதிர்கோணத்தில் பரிதாபகரமாக சென்று கொண்டிருக்கின்றன!

ஜனங்களின் நிர்விசாரமும், அலட்சியமும் ஒருபுறமும் இருக்க, இன்றைய பிரசங்கிமார்களின் நிலையோ இன்னமும் மகா கேடாகவே இருக்கிறது. தங்கள் கூட்டங்களுக்கு ‘எண்ணிக்கை கணக்கில்’ அதிக தொகை இருந்தால் போதும்... அவர்கள் ஆத்தும ஜாக்கிரதை உள்ளவர்களா? இல்லையா? என்பதைக் குறித்து அக்கறைபடுவதே இல்லை. இதுபோன்ற பிரசங்கிகளே, தங்கள் அந்தரங்க வாழ்க்கையில் உண்மையாய் இருப்பதும் இல்லை! ஜெபஜீவியமும் இருப்ப தில்லை! ஆத்தும தாகமும் கொண்டிருப்பதில்லை! மொத்தத்தில் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற பொன்னான சுவிசேஷம் அலட்சியமாவதை குறித்து சஞ்சலம் அடையும் தாசர்கள் ஒரு சிலர்தான் உண்டு!

ஓ, வாலிபனே! நீயோ இன்றைய தேய்ந்துவரும் கிறிஸ்தவத்தில் விழித்துக்கொள்! ‘கிறிஸ்தவ வாழ்வில் அசமந்தத்தை’ தேவன் நியாயந்தீர்ப்பார்..... இனி வரும் நாட்களில் ‘ஏனோதானோ’ என்ற அசமந்தம் உதறி, கர்த்தரின் பாதம் துரிதமாய் வந்து சேர்! கர்த்தர் உன்னை இரட்சிப்பார்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.